27th September 1961]

(2) THE MADRAS LOCAL AUTHORITIES FINANCE BILL, 1961 (L.A. BILL NO. 34 OF 1961).

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : Sir, I move—

"That the Madras Local Authorities Finance Bill, 1961 (L.A. Bill No. 34 of 1961) be taken into consideration."

DEPUTY SPEAKER : Motion moved—

"That the Madras Local Authorities Finance Bill, 1961 (L.A. Bill No. 34 of 1961) be taken into consideration."

SRI V. K. KOTHANDARAMAN : Sir, I move the following amendment :—

"That the Madras Local Authorities Finance Bill, 1961 (L.A. Bill No. 34 of 1961) be referred to a Select Committee."

The amendment was duly seconded.

DEPUTY SPEAKER : The motion and the amendment are before the House for discussion.

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், இந்த ஸ்தல ஸ்தாபன நிதி மசோதாவை பொறுக்குக் கமிட்டிக்கு விட வேண்டுமாக என் அபிப்பிராயத்தைக் கொடுத்திருக்கிறேன். காரணம், நமக்கு முன் உள்ள மசோதாவில் பிரதானமாக, குறிப்பாக இருப்பது, எண்டர்டெயின்மெண்ட் டாக்ஸுக்கு சர்சார்ஜ் விதிப்பதைப் பற்றிய விஷயம். இப்பொழுது சர்சார்ஜ் விதிக்க வேண்டும் என்று சொல்லப்படும் நேரத்திலே, அது மூன்ருவது ஐந்தாண்டுத் திட்ட நிதிக்காக வசூலிக்க வேண்டிய பகுதிகளில் ஒரு பகுதி என்று நினைக்கிறேன். கார்ப்பொரேஷன், முனிசிபல் கவுன்சில், டௌன்ஷிப், பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் இவை சர்சார்ஜ் விதிக்கும்போது, எல்லா ஸ்தாபனங்களும் ஏககாலத்தில் விதிக்கும் என்ற முறை இல்லை என்று நினைக்கிறேன். ஆகவே, இந்த நிலையில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் சர்சார்ஜ் விதித்தும், ஒரு சில இடங்களில் விதிக்காமலும் விட்டு விட்டால், அது குழப்பத்தைத்தான் ஏற்படுத்தும். ஆகவே தான்—அந்த மாதிரி சர்சார்ஜ் போடக்கூடாது என்று சொல்லவில்லை—இந்த சர்சார்ஜ் என்பதை எந்த அடிப்படையில் போடவேண்டும் என்பதையெல்லாம் தீர்க்கமாக பரிசீலனை செய்து கொண்டு வரவேண்டுமென்பதுதான் இதை செலக்ட் கமிட்டிக்கு அனுப்ப வேண்டும் என்பதற்குக் காரணம். அதே போலச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

SRI R. SRINIVASA IYER : Sir, this legislation is welcome, though it has been brought forward after some delay. Act XXXV of 1958 was passed in 1958 and that has come into force from January 1960 and all the Panchayats and Local authorities have been complaining that their resources are not enough. That has been recognised by the Government now. The method of increasing the resources for the purpose of providing essential civic amenities such as good roads, lighting, sanitation and protected water-supply in a satisfactory manner is now envisaged. The hon. Member Sri Kothandaraman says that the Bill should be referred to a Select Committee. Sir, it is not necessary. Because, the Local Authority concerned is given the discretion to levy the tax.

[Sri R. Srinivasa Iyer] [27th September 1961

They cannot complain that the Government have not given them enough finance and at the same time refuse to levy this tax when an opportunity to levy this tax is given to them Sections 115 and 116 of the Act XXXV provide for the levy of a surcharge on land revenue. Now, when additional revenue is necessary for them, the Government have to find out ways and means to augment the financial resources of the local bodies. The items on which additional tax can be levied are also found in Clause 3. Sir, it is proper that discretion should be given. It is not necessary that they should compulsorily levy these taxes. If they can invite shows and entertainments without levying any additional taxes, let them do so.

In this connexion, I also wish to refer to another matter. I have always been suggesting that the Motor Vehicles Taxation Act has got to be amended. When the Government are trying to augment the finances of the Local Bodies, this suggestion also deserves to be considered. When the Tolls were abolished, the tax collected from the motor cars, lorries and buses that was the criterion for giving aid to the municipal authorities. From 1931 to 1961 in these 30 years—we have increased the number of motor vehicles and the tax. The number of vehicles has also been increasing. During the Third Plan period, we will have three lakhs of motor vehicles. It is proper that the Motor Vehicles Act is also amended suitably. The distribution of funds should also be done in an equitable way. Because, there are certain local authorities which have long distances of roads to maintain and some of them have very good roads, connecting big towns and municipalities like Madurai, Tiruchirappalli, Tanjore, Coimbatore, Salem, etc. In such cases, the panchayat unions will have the maximum distance of roads to maintain. They will find it very difficult to undertake this work with the '40 naye Paise per head of population' grant. It is proper that the road development fund available with the Government should be distributed on a mileage basis. Even the panchayat unions which had very good roads within their jurisdiction will find it difficult to maintain these good roads with the present allotment. Some of the backward areas will find it difficult to maintain the roads for want of funds. In the first two Plan periods, we have laid large extents of new roads and we have also formed metalled roads. If they are not provided with enough funds for the maintenance of these roads laid in the past 10 years, all those roads will become non-existent. We have a 20-Year Plan for laying more and more roads and also metalling them so that a metalled road will be available within one mile's radius from every village, and every village will have a good village road. Whatever it is, they must first and foremost try to maintain the existing roads in a proper condition and for this purpose they must have sufficient funds.

We must also have a larger share from the Income-tax and Petrol Cess for the development of our roads. Even now, some

27th September 1961] [Sri R. Srinivasa Iyer]

foreign Associations are giving several crores for India for the development of certain roads and we expected that the Madras—Bangalore road will also benefit from the same. But, unfortunately; that has been omitted and has not received adequate attention. We must try to get a higher share from all these things. Now, sales-tax in respect of certain items is taken away by the Central Government (though they are guaranteeing to make good the loss) by the introduction of the Excise Duty in respect of those items. We must be careful in trying to get larger share from this levy also and also by the proper administration of the Sales-Tax Act. As I said already, the distribution should be made on the mileage basis in respect of the roads maintained by the panchayat union councils. This small Bill need not go before a Select Committee as the object of the Bill is laudable and useful. Hence, it should be passed as quickly as possible.

Sri A. GOVINDASAMY : கனம் தலைவர் அவர்களே, ஸ்தல ஸ்தாபனங்கள் தங்களுடைய வருவாயைப் பெருக்கிக்கொள்ளும் பொருட்டு சிலவரிகள் விதித்துக்கொள்ளலாம் என்ற நிலைமையில் இந்த மசோதா இங்கு கொண்டுவரப்படுகிறது. களியாட்டத்திற்கு மேலும் வரிபோடுகின்ற நிலைமை இதில் வருகிறது. இந்த மசோதா அவசர அவசரமாக இப்போது நிறைவேற்றினால் எதிர்காலத்தில் சில சிக்கல்கள் ஏற்படும் என்ற காரணத்தினால் இதைப் பொறுக்கு கமிட்டிக்கு விட்டு, பரிசிலனைசெய்யவேண்டுமென்று நாங்கள் கருதுகிறோம். பொறுக்குக் கமிட்டியில் ஒன்றிரண்டு நாட்கள் பரிசீலனை செய்து, வருகிற நவம்பர் கூட்டத்திலேகூட இந்த மசோதாவைச் சட்டமாக்கிவிடலாம். அப்படிச் செய்தால், இதனால் நல்ல விளைவுகள் ஏற்படும் என்ற காரணத்தால்தான் இந்த மசோதா பொறுக்குக் கமிட்டிக்குப் போக வேண்டுமென்ற கருத்தை நாங்கள் ஒத்துக்கொள்கிறோம்.

அது மட்டுமல்ல. என்டர்டெயின்மெண்ட்ஸ் டாக்ஸ் ஆக்டில் 4-எ பிரிவில் கண்டுள்ள விகிதத்தைவிட மூன்று மடங்கு கூட வரி விதிக்க "லோகல் அதாரிடி" க்கு அதிகாரம் தரப்படுகிறது. இந்த மசோதாவில் அவர்கள் நினைக்கிறபடி வரி போடுவதற்கு வேண்டிய ஒரு ஷரத்து இதிலே இருக்கிற காரணத்தால்தான் இதைக் கூர்ந்து கவனிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

பஞ்சாயத்துக்களுக்கு எந்த அளவு நிதி கொடுத்து உதவ முடியுமோ அந்த அளவுக்குச் சர்க்காரே கொடுக்க முன் வரவேண்டும். அது மாத்திரமல்லாமல், பஞ்சாயத்து யூனியனுக்கு இந்த அதிகாரத்தைக் கொடுக்கும் போது, சில பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் மீது, சில உறுப்பினர்கள் மீது அதிருப்தி ஏற்படும் சூழ்நிலை ஏற்படக்கூடும். ஆகையால், சர்க்காரே வரி விதித்து, அதன் மூலம் வரும் தொகையில் பங்குத்தொகை லோகல் அதாரிடிக்குக் கொடுக்க முன் வரலாம். அது மாத்திரமல்ல. முனிசிபாலிட்டிக்கும் கார்ப்பரேஷனுக்கும் கொடுக்க வேண்டிய தொகை சர்க்காரிடமிருந்து உரிய காலத்தில் கொடுக்கப்படாததன் காரணமாக, ரோடு போடும் வேலை, சுகாதார வசதி செய்வது,-இன்னும் மற்ற பல சௌகரியங்கள் செய்வதிலே கூட தடை ஏற்பட்டியிருக்கிறது என்பது உண்மைதான். சர்க்கார் பணம் கொடுப்பதிலே காலதாமதம் தவிர்க்கப்பட வேண்டும். சர்க்கார் பல வரிகள் போடுவதால், கார்ப்பரேஷனுக்கு உதவி செய்ய வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. சொத்து வரியை 20 சதவிகிதத்திலிருந்து 30 சதவிகிதத்துக்கு உயர்த்துவதனால் பாதகம் ஏற்படுமா, அதனால் எவ்வளவு வருமானம் என்பதை ஆர அமர சிந்தித்து முடிவு செய்ய வேண்டும். நவம்பர் மாதத்தில் ஒரு நாள், இரண்டு நாள் கூடி இதைப் பரிசீலனை செய்து கொள்ளலாம் என்ற காரணத்தால், இதை செலக்ட் கமிட்டிக்கு விட வேண்டுமென்ற கருத்தை நானும் ஆதரிக்கிறேன்.

SRI M. KALYANASUNDARAM : கனம் தலைவர் அவர்களே, இந்த மசோதா ஏற்கனவே விதித்திருக்கக்கூடிய தமாஷாவரியை அதிகரிப்பதற்கு முயற்சிக்கிறது. புதிதாக நியமிக்கப்பட்ட பஞ்சாயத்து யூனியன்களுக்குப் பண வசதி செய்து கொடுக்க வேண்டும் என்ற பிரச்னை ஒன்று. அது தனி. ஆனால், இந்த மசோதாவின் நோக்கம் என்ன ? பஞ்சாயத்து யூனியன்கள், நகரசபைகள், சென்னை கார்ப்பரேஷன் இன்னும் ஏற்கனவே உள்ள டவுன்ஷிப்கள் இவைகளுக்கு வரி விதிக்கும் அதிகாரங்கள் தரப்பட்டுள்ளன. மூன்று டவுன்ஷிப்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. மற்றவையும் சேர்க்கப்படும் என்று நினைக்கிறேன்—திருத்தங்கள் மூலம். டவுன்ஷப், பஞ்சாயத்து யூனியன் இவையெல்லாம் இரண்டு வகையாக வரியை உயர்த்தலாம். ஒவ்வொரு பிரதேசத்தில் விதிக்கக்கூடிய வரி மீது மேல் வரி, சர்ச்சாஜ் என்ற முறையில் போட்டு வசூலிக்கலாம். சினிமாப் படக் காட்சி ஒவ்வொன்றுக்கும், மொத்தமாக இவ்வளவு தொகை என்று ஒரு தொகை நிர்ணயிக்கலாம். (கனம் ஸ்ரீ சுப்பிரமணியம் : குறுக்கீடு) " டாக்ஸ் ஆன் ஈச் ஷோ ஆப் ஸினிமாடோக்ராப் எக்ஸிபிஷன் " என்று இருக்கிறது. " ஈச் ஷோ " என்று போட்டிருக்கிறது. ஷோ டாக்ஸ் இருக்கிறது. புதிது என்று சொல்லவில்லை. ஒவ்வொரு காட்சிக்கும் இவ்வளவு வரி என்று விதிக்கலாம், இரண்டையும் விதிக்கலாம், ஒன்றை மட்டும் விதிக்கலாம், இரண்டையும் விதிக்காமல் இருக்கலாம், புதிதாக விதிக்காலம், இருப்பதை ரத்து செய்யலாம். சில காட்சிகளுக்கு விதிவிலக்குக் கொடுக்கலாம் என்று பின்னல் பிரிவுகள் வருகின்றன. இதிலே எதிர்பார்ப்பவர்களுக்கு என்ன வரும் என்பதைப் பார்க்க வேண்டும். சில பஞ்சாயத்து யூனியன்கள் தங்கள் எல்லைக்குள்ளே டூரிங் சினிமாக் கொட்டகை வந்தால் வருமானம் அவர்களுக்குக் கிடைக்கும் என்பதிலே ஆர்வத்தோடு இருக்கிறார்கள். ஏற்கனவே இருக்கும் எண்டர் டெயின்மெண்ட் டாக்ஸில் அவர்களுக்குப் பங்கு கிடைக்க வேண்டும் என்பதற்காக ஒரு பஞ்சாயத்துக்கும் இன்னொரு பஞ்சாயத்துக்கும், நகர சபைக்கும் கூட எல்லை சம்பந்தமாகப் போட்டி வந்து, இந்தப்
12-00 noon பிரச்னைகளெல்லாம் மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் முன்பும் கன்ஸல்டேடிவ் கமிட்டி முன்பும் வந்து, எப்படி பங்கு போடலாம் என்பதை விவாதித்துக் கொண்டிருக்கிறோம். இப்படி சர்ச்சார்ஜ் போடுவதற்கு உரிமை கொடுக்கிறபோது சில தொந்தரவுகள் வரும். அந்தப் பஞ்சாயத்துக்களுக்கு வரக்கூடிய உபரி வரியும், ஷோ டாக்சும் குறையுமா ? அல்லது அதன் நிலைமை என்ன என்பது தெளிவாக வேண்டும். இப்படியெல்லாம் ஒன்றுக்கொன்று மோதல் ஏற்படும். நான் தாமாஷா வரி கூடாது என்று சொல்ல வரவில்லை. இன்றையதினம் பஸ் தொழிலுக்கும், சினிமாவுக்கும் அதிக வரி விதிப்பது பற்றி எனக்கு ஆட்சேபணை இல்லை. தமாஷா வரி மூலம் நமக்கு 1958–59-இல் ஒரு கோடியே எழுபது லட்சம் ரூபாய் வந்திருக்கிறது. 1959–60-ல் ஒரு கோடியே எண்பத்தோரு லட்சம் ரூபாய் வந்திருக்கிறது. நடப்பு வருஷத்தில் கிட்டதட்ட ஒரு கோடியே தொண்ணூற்றெட்டு லட்சம் வரும் என்று எஸ்டிமெட் போடப்பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட 2 கோடி அளவுக்கு எதிர்ப்பார்க்கப்படுகிறது. ஆனல், இந்த வரியும் கூட பூராவாக வசூலிக்கப்படுவதாகச் சொல்ல முடியாது. இந்த வரியை ஏமாற்ற பல சூழ்ச்சிகள் கையாளப்படுகின்றன. அதிகாரியும் சரி, சினிமாக் கொட்டகைக்காரர்களும் சரி சேர்ந்து கொண்டு அரசாங்கத்தை ஏமாற்றுவதற்கான புகார் அரசாங்கத்திற்கு வந்து, அதை விசாரிக்க ஒரு அதிகாரியையும் போட்டு அவர் திடீரென்று ஷோவுக்குப் போன போது 400 பேர்கள் உட்கார்ந்து பார்த்த கொட்டகையில் எட்டே எட்டு முத்திரை டிக்கட் விற்கப்பட்டிருக்கிறது என்பதான விவரங்கள் எல்லாம் கனம் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு வந்திருக்கும் என்று நினைக்கிறேன். ஏற்கெனவேயிருக்கிற விகிதாச்சாரப்படியே இந்த வரியைச் சரியானபடி வசூலிக்க முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். அப்போது இந்த இரண்டு கோடிக்கு அதிகமாகவே வசூலாகும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இன்னும் விகிதாச்சாரத்தை உயர்த்திவிட்டால் ஏற்றத்தாழ்வு அதிகமுள்ளது குறையும் என்பது நோக்கம். இந்த மசோதாவை எதிர்க்கவில்லை. இருந்தாலும் நண்பர் திரு. கோதண்டராமன் சொன்னது போல் இதைப்

27th September 1961] [Sri M. Kalyanasundaram]

பொறுக்குக் கமிட்டியின் பரிசீலனைக்கு விட்டு நன்றாகப் பரிசீலனை செய்து நிறைவேற்றலாம் என்பது என் கருத்து. இந்தமாதிரிப் பிரச்னைகளை ஆலோசிக்க எல்லாக் கட்சித் தலைவர்களையும் கொண்ட கமிட்டி இருக்கிறது. பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் இதைப் பற்றி விவாதிக்கவும் வழியிருக்கிறது. முன்பே வெளியிடுவதற்கு முன் இந்த மசோதா பற்றி அறிவிக்கப்பட்டிருந்தால் நல்ல உருப்படியான யோசனைகள் சொல்ல முடியும். இப்போதும் இதைப் பொறுக்குக் கமிட்டிக்கு விடுவதில் ஒன்றும் கஷ்டம் இருக்காது என்று நினைக்கிறேன். நவம்பர் மாதம் 9-ம் தேதி மீண்டும் கூடுகிறோம். அதற்குள் ஒன்றிரண்டு நாள் கூடி விவாதித்தால் போதுமானது. இரண்டு நாளைக்குள் அதைப் பரிசீலனை செய்ய முடியும். அந்தப் பரிசீலனையின் அடிப்படையில் மசோதாவை நன்கு திருத்தி அமைக்க வேண்டும். ஆகவே கனம் அமைச்சர் அவர்கள் திரு. கோதண்டராமனுடைய திருத்தத்தை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

* SRI V. K. RAMASWAMY MUDALIYAR : கனம் கோதண்டராமன் அவர்கள்கொடுத்திருக்கக்கூடிய திருத்தத்தை ஆதரித்துச் சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். முன்பே லோகல்பாடி மூலம் பல காரியங்கள் செய்வதற்கும் சட்டம் போட்டோம். இப்போதும் வருமானத்தை அவற்றுக்கு அதிகப்படுத்த வேண்டும் என்றே ஆலோசித்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் திடீரென்று ஒரு மசோதாவைக் கொண்டு வருவது அவ்வளவு பொருத்தமல்ல. இதைப் பற்றி முன்பே ஆலோசிக்க இடமும், சந்தர்ப்பமும் இல்லாவிட்டாலும்—இப்போது இதைப் பொறுக்கு கமிட்டிக்கு விட்டால் மசோதாவை நல்லபடியாக உருவாக்க சந்தர்ப்பம் ஏற்படும். இது முக்கியமான மசோதா. நவம்பர் மாத செஷனிலேயே இதை மீண்டும் எடுத்துக் கொள்ளலாம். ஆகவே இதை இப்போது பொறுக்குக் கமிட்டிக்கு விட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

DEPUTY SPEAKER : The Hon. Minister will now reply.

SRIMATHI T. N. ANANDANAYAKI : Mr. Deputy Speaker, Sir, I tried to catch the eye of the Chair to give me an opportunity to speak but I could not catch the eye of the Chair. This is a Bill which affects the Corporation and also the citizens. . . .

DEPUTY SPEAKER : Before I called the Hon. Minister to speak, the hon. Member should have caught my eye.

SRIMATHI T. N. ANANDANAYAKI : If the Chair says that no hon. Member should speak hereafter, I am prepared to sit down.

DEPUTY SPEAKER : Now the hon. Member can speak.

SRIMATHI T. N. ANANDANAYAKI : 'It is also proposed to amend the Madras City Municipal Act, 1919, so as to raise the maximum rate of property tax in the case of any land or building from 20 per cent to 25 per cent of its annual value.' என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் சட்டத்திலே அதைக் காணோம். உயர்த்தப்போகிறார்கள் என்றால் பின்னாலே வருவதற்கு இப்போது தயார் செய்து வைக்கிறார்களா என்று தெரியவில்லை. இதனால் பின்னால் நகரசபைக்குப் பெரிய தொல்லைதான் விளையும். ஏற்கனவே தொந்தரவு பலவற்றோடு கட்டுகிற வரியை மேலும் சிக்கலானதாக நகரசபைகளுக்குத் தொந்தரவு விளைவிக்கக்கூடியதாக ஆக்கக் கூடாது. இந்த எண்டர்டெய்ன்மெண்டு டாக்ஸைப் போல சர்சார்ஜையும்" அரசாங்கமே வாங்கிக்கூடப் பஞ்சாயத்துக்களுக்கு கொடுக்கலாம். அது ஓரளவு வரவேற்கத்தக்கதாக இருக்கும். இருந்தாலும் கார்ப்பரேஷன் போன்றவைகளுக்குத் தொந்தரவு

ஏற்படாத வகையில் இதை அமைக்க வேண்டும். ஆகவே அதையும் விளக்கிச் சொன்னால் நன்றாக இருக்கும். அதோடு பொறுக்குக் கமிட்டிக்கு விடுவதற்கு இசைந்தாலும் கூட மிகவும் உபயோகமாக இருக்கும் என்று சொல்லிக் கொண்டு முடித்துக் கொள்ளுகிறேன்.

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : இந்த மசோதா எந்த நோக்கத்தின் அடிப்படையில் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்பதைச் சொன்னேன். ஆனால் கனம் அங்கத்தினர்கள் பேசும் போது பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்பினால் நல்லது என்று சொன்னார்கள். ஆகவே அதை ஏற்றுக் கொண்டு இந்த மசோதாவை பொறுக்கு கமிட்டிக்கு அனுப்ப ஒப்புக் கொள்கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I move—

'That the Madras Local Authorities Finance Bill, 1961 (L.A. Bil No. 34 of 1961), be referred to a Select Committee consisting of the following Members of the Assembly :—

1. Sri V. K. Kothandaraman.
2. Sri M. Selvaraj.
3. Sri K. R. Nallasivam.
4. Sri D. S. Authimoolam.
5. Sri V. K. Ramasamy Mudaliyar.
6. The Hon. Srimathi Lourdhammal Simon.
7. The Hon. Sri C. Subramaniam.
8. Srimathi T. N. Anandanayaki.
9. Sri P. G. Karuthiruman.
10. Sri V. K. Krishnamurthy.
11. Sri R. Srinivasa Iyer.
12. Sri K. R. Viswanathan.
13. Sri M. S. Selvarajan.
14. Sri J. Matha Gowder.
15. Srimathi Kolandai Ammal.

The motion was put and carried.

DEPUTY SPEAKER : The original motion and the amendment will not be put to note in view of the decision of the House on the motion to refer the Bill to a Select Committee.

Under Rule 99 (1) of the Madras Legislative Assembly Rules I nominate the Hon. Minister for Local Administration as the Chairman of the Committee.

(3) THE MADRAS ESTATES (SUPPLEMENTARY) AMENDMENT BILL, 1961.

* THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, I beg to introduce the Madras Estates (Supplementary) Amendment, Bill [a], 1961, and move—

'That the Bill be taken into consideration.'

It has become necessary to amend the Madras Estates (Supplementary) Act, 1956, in the following circumstances :—

Section 11 (1) of the Madras Estates (Supplementary) Act, 1956 (Madras Act XXX of 1956), lays down that all suits, appeals or other proceedings (other than those pending before the High

[a] Published in the *Fort St. George Gazette*, Extraordinary.